சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : 01

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

Department Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

**தேர்ச்சி** : **சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் வரைவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **மனித, விலங்கு உருவங்களை இரேகைகளால் வரைவார்.**

**செயற்பாடு** : **'நகர்புறச் சூழலுக்குரிய மனித, விலங்கு உருவங்களை இரேகைகளால் வரைவர்'**

**ஒப்படை** : **பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. இணையத்தளம், தொலைக்காட்சி போன்ற கட்புல, செவிப்புல ஊடகங்களை பாவித்து நகர்புற சூழல் பற்றியதான காணொலி ஒன்றை பார்வையிடவும்.

02. காணொலியை பார்வையிடும் போது மனித மற்றும் விலங்கு உருவங்களை தனித்தனியாக மாதிரிப் படமாக வரைந்துக்கொள்க.அதில் சூழலில் காணப்படும் மனித நடவடிக்கைகள், விலங்குச் செயற்பாடுகள், சூழல் தன்மைகள், ஆடை அணிகலன்கள், நிறங்கள் சம்பந்தமான குறிப்பெடுத்து வைத்துகொள்ளுங்கள்.

03. கானொலியினை பார்க்கும் போது கண்ணுக்கு புலப்படும் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக மனிதர்கள் மற்றும் விலங்குகள் உருவங்களை தனித்தனியாக மாதிரி குறிப்பு ஒன்றை வரைக.

04. நீங்கள் வரைந்து கொண்ட மாதிரி வரிப்படத்தில் முகப்பாவனை ஆடை அணிகலன்களில், நகர்புற சுற்றாடலின் தன்மை பற்றியதான விஷேட அவதானத்தை முன்வைக்குக.

05. மேற்குறிப்பிட்ட படிமுறைகளில் பெற்ற ஒழுங்கின் அடிப்படையில் நகர்புற சூழலில் உங்கள் மனம் கவர்ந்த சந்தர்ப்பத்தை முறையாக மனித மற்றும் விலங்கு உருவங்களை பயன்படுத்தி கருத்தினை வெளிப்படுத்தும் வரைப்படத்தை வரைக.